# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 19 ஹிஜ்ரி 1433 ஷஃபான் ஜூன் 2012

இலவசம்


# ஆன்மீக மேம்பாடு!
# அதிக நல்லாசி! ஒளிமிக்க வாழ்க்கை!



# எண்பதாம் அகவையில் எழுச்சிமிகு ஜாமியா




சிங்கப்பூர் ஜாமியா அறநிறுவனத்தின் 80ம் ஆண்டு சிறப்பு விருந்து நிகழ்ச்சி ஜூன் 29, 2012 அன்று சுவிஸ் ஹோட்டல் ராபிள்ஸ் சிட்டி மாநாட்டரங்கில் சிறப்பாக நடைபெற்றது. பிரதமர் லீ சியன் லூங் தமது துணைவியாருடன் கலந்துகொண்ட இந்த சிறப்பு விருந்து நிகழ்ச்சியில் அமைச்சர் யாக்கூப் இப்ராஹீம், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மலாக்கா மாநில முதல்வர் டத்தோ முஹம்மது அலி ருஸ்தம், சிங்கப்பூரிலுள்ள வெளிநாட்டுத் தூதர்கள், தூதரக அதிகாரிகள், நன்கொடையாளர்கள், பல இன சமூகத் தலைவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், தன்னார்வ அமைப்புகளின் பிரதிநிதிகள், தொண்டூழியர்கள் என்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட விருந்தினர்கள் கலந்துகொண்டார்கள்.

கல்வி, சமூக நலம், உடல்நலம், பல சமயம் மற்றும் பல இன நல்லிணக்கப் பணிகள் என்று பதினெட்டுக்கும் மேலான செயல் திட்டங்கள் மூலம், இன, மொழி மற்றும் மதங்கள் கடந்து அனைவர்க்கும் பயனுள்ள சிறப்புப் பணிகளை திறம்படச் செயல்படுத்தும் ஜாமியா நிறுவனத்தின் சேவைகளுக்கு தனது உரையில் பிரதமர் லீ சியன் லூங் புகழாரம் சூட்டினார்.

மலாய் மொழியிலும், ஆங்கிலத்திலும் உரையாற்றிய பிரதமர் லீ சியன் லூங், ஜாமியாவின் 80 ஆண்டு கால வளர்ச்சியையும் அதன் நற்பணிகளையும் எடுத்துரைத்தார். மலாய்-முஸ்லிம் சமூகத்தின் தேவைகளை காலத்திற்கேற்ப நிறைவேற்றி வந்த ஜாமியா தேசிய அளவில் செயல் திட்டங்களிலும், முயற்சிகளிலும் தற்போது ஈடுபட்டு வருவது சிறப்புக்குரியது. அதன் நற்பணிகள் முன்னுதாரணமானவை என்று அவர் பாராட்டினார்.

பாலர் பள்ளி, வணிகப் பள்ளி, வசதி குறைந்தவர்களுக்கான பாரமரிப்பு இல்லங்கள், இலவச சுகாதாரச் சேவை, திருமண ஆலோசனை, சட்ட உதவி முதலான ஜாமியாவின் நற்பணிகளை பிரதமர் சுட்டிக் காட்டினார்.

மலாய்-முஸ்லிம் சமூகத்திற்கான பணி என்ற வரம்புக்கு அப்பால் பல இன, பல மொழி, பல சமய நல்லிணக்கத்திற்கும் ஒருங்கிணைப்புக்கும் ஜாமியா பாடுபட்டு வருகிறது. எண்பது ஆண்டுகளுக்கு முன் 1932ல் ஜாமியாவை நிறுவிய மவுலானா அப்துல் அலீம் சித்தீக்கி அவர்களின் வழியில் அரும்பணி விரிவடைந்துள்ளது. சிங்கப்பூரில் அனைத்து சமய அமைப்பை (IRO) நிறுவிய அவருடைய பெருமைகளை பிரதமர் நினைவு கூர்ந்தார்.

ஜாமியாவின் சாதனைகளுக்கு அதன் வலுவான தலைமைத்துவமும், அதன் ஊழியர்கள், மற்றும் தொண்டூழியர்களின் அர்ப்பணிப்பும், பலத்த சமூக ஆதரவுமே ஆதாரம். 1970ல் தலைவராகப் பொறுப்பேற்ற ஹாஜி அபு பக்கர் மைதீன் ஆற்றிவந்துள்ள விரிவாக்க சேவைகள் பாராட்டுக்குரியவை. அவர்கள் வழியில் இன்று செயல்பட்டுவரும் ஜாமியா தலைவர் ஹாஜி அப்துல் கரீம் அவர்களின் நற்பணிகளுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும் என்று திரு லீ தெரிவித்தார்.

ஜாமியாவும், மலாய்-முஸ்லிம் சமூகமும் மென்மேலும் உயர தமது நல்வாழ்த்துகளையும், நம்பிக்கையையும் பிரதமர் தெரிவித்துக் கொண்டார்.

ஜாமியாவின் முன்னாள் தலைவர் ஹாஜி அபு பக்கர் மைதீனின் சமூகநலப்பணி குறித்த

விரிவான நூலினை இந்நிகழ்வில் பிரதமர் வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் தகவல், செய்தி மற்றும் கலைகள் அமைச்சு, மற்றும் முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹீம் 35 சமூக நலப் பணியாளர்கள், அறக்கொடை வள்ளல்கள் மற்றும் சமூகத் தலைவர்களுக்கு ஜாமியாவின் சமூக நலப்பணி விருதினை வழங்கினார்.

# முயிஸ் வழங்கும் ரமலான் அல்-முபாரக் நல்வாழ்த்து

அனைத்துப் புகழும் பேரருளாளன், பெருங் கருணையாளன் அல்லாஹ்வுக்கே உரியவை. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் ஆசிகளுடன் போற்றுதலுக்குரிய ரமலான் மாதத்தை நாம் மீண்டும் 2012 ஹிஜ்ரி 1433ல் சந்திக்கிறோம். நல்லாசிகளும் கருணையும் நிறைந்த மாதம் இது. நமது பெருமானார் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) மீது நல்லாசிகள் உரித்தாகுக.

வல்ல அல்லாஹ்விடமிருந்து வளம் கொழிக்கும் வெகுமதிகளை நாம் ஈட்டுவதற்குரிய சிறப்பு மாதம் இது. நமது ரமலானை வழிபாட்டுச் செயல்களால் நிறைத்து, நமக்குள்ளே ஆன்மீகத்தையும், நற்பண்பு களையும் வளர்த்துக் கொள்ள நம்மை ஊக்குவிப்பது இம்மாதத்தின் நோக்கம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, ஒன்று சேர்ந்து குர்ஆன் ஓதி, நமது குடும்ப உறவை ஆழமாக்கிக் கொள்ள குடும்பத்துடன் சேர்ந்து பிரார்த்தனை செய்வோம். குர்ஆன் கூறும் ஏகத்துவச் செய்திகளைச் சிந்தித்துப் பார்க்கவும், நமது புரிந்துணர்வை ஆழமாக்கவும் நேரம் ஒதுக்கி, இந்த மெச்சத்தக்க செயல்களை மேலும் வலுப்படுத்தலாம். குர்ஆன் வசனங்களின் அர்த்தத்தை உள்ளத்தில் பதித்தால், நமது குணநலனும் நமது பிள்ளைகளின் குணநலனும் சீர்பெறும். அதன் பிறகே புனித குர்ஆன் நமது வாழ்க்கையை உண்மையாகவே ஒளிமயமாக்கும்.

நம்மைச் சுற்றியுள்ளவர்களின், குறிப்பாக நமது பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள், அண்டைவீட்டார்கள், அனைத்து இனங்களை யும் சமயங்களையும் சேர்ந்த வசதி குறைந்தவர்கள் ஆகியோரின் வாழ்வை ஒளிமயமாக்கிட நாம் கருணையான செயல்களைச் செய்தால்தான் ரமலானின் அழகு மென்மேலும் பெருகும். இத்தகைய செயல்களால் நற்செயல்களின் பலனைப் பெறுவோரின் உள்ளத்தில் இடம்பிடிப்பதோடு மட்டுமின்றி, நமது உள்ளத்திலும் மகிழ்ச்சியும் நன்றியும் நிரம்பும்.

ஆன்மீகத்தைப் பெருக்கி, நல்ல குணநலனை வளர்த்துக் கொண்டு, அனைவருக்கும் நன்மை செய்வதில் நமது நேரம், சக்தி, முயற்சி அனைத்தையும் நாம் குறியாகக் கொண்டிருக்கையில், இந்த ரமலான் நம் அனைவருக்கும் மென்மேலும் அர்த்தமுள்ளதாக இருக்கட்டும்.

# ரமலான் உணர்வு

ரமலான்2012/1433ஹிஜ்ரி-உணர்வு இயக்கம் பல சிறப்பு நிகழ்ச்சிளுடன் நடைபெற்று வருகிறது.

ஆன்மீக மேம்பாடு, அதிக நல்லாசி, ஒளிமிக்க வாழ்க்கை ஆகியவையே இதன் ஆதாரக் கொள்கை. தொழுகையும் திருக்குர்ஆன் ஓதுவதுமே இவ்வாண்டு இயக்கத்தின் கோட்பாடு. தலைமை முஃப்தி டாக்டர் முஹம்மது ஃபத்ரிஸ் பக்ரம், மிஃராஜ் இரவில் அல் ஈமான் பள்ளிவாசலில் நிகழ்த்திய சிறப்புரை, பல பள்ளிவாசல்களில் இளைஞர்கள் கலந்து கொண்ட ரமலான் விளக்க நிகழ்ச்சி ஆகியவை முன்னோட்டமானவை. அவற்றைத் தொடர்ந்து அல் முஜாஹிதின் பள்ளிவாசலில் சிறப்பு நிகழ்ச்சி இடம் பெற்றது. தகவல், தொடர்பு, கலைகள் அமைச்சரும், முஸ்லிம் விவகார அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.



# நாகூர் தர்கா கந்தூரி விழா

இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையமான நாகூர் தர்காவில் ஷாஹுல் ஹமீது நாயகரைச் சிறப்பிக்கும் வருடாந்திரக் கந்தூரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நாகூர் ஆண்டகை அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் கந்தூரி விழா நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு விழாவின் தொடக்கமாக 22.4.2012 ஞாயிற்றுக்கிழமை அவர்களின் பெயரில் மவ்லூது ஓதி கொடியேற்றப்பட்டது. கந்தூரி வைபவ நிறைவு 1.5.2012 செவ்வாய்க் கிழமை காலை 10மணிக்குத் தொடங்கி பயன்மிக்க நிகழ்ச்சிகளுடன் நண்பகல் வரை நடைபெற்றது.

இன சமய பேதமின்றி அனைத்து சமூக மக்களும் கலந்து கொண்ட கந்தூரி விழாவிற்கு சமூகத் தலைவர்கள் பலரும் வருகையளித்துச் சிறப்பித்தனர். இஸ்லாமிய சமய மன்றத்தின் தலைவர் ஹாஜி அலமி மூஸா, செயலாளர் அப்துல் ரசாக் மரைக்கான், முயிஸ் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், வளர்தமிழ் இயக்கத் தலைவர் வி.பி. ஜோதி, பேராசிரியர் சுப திண்ணப்பன், சீன, பௌத்த குலமரபுச் சங்கங்களின் தலைவர்கள் முதலானோர் வருகை தந்தனர். நாகூர் தர்கா செயற்குழுவின் செயலாளர் அல்ஹாஜ் நசீர் கனி தமது வரவேற்புரையில் அனைவருக்கும் நன்றி பாராட்டினார்.

நாகூர் தர்கா இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையமாகக் கடந்த ஆண்டு அதிகாரபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்ட பிறகு நடைபெற்ற இந்த இரண்டாம் ஆண்டு விழாவிற்கு சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வருகையளித்தனர்.

நாகூர் ஆண்டகையைப் போற்றும் சிறப்புப் பாடல்களையும் இஸ்லாமிய கீதங்களையும் நமது இசைக் கலைஞர்கள் இனிமையாகப் பாடி அனைவரையும் மகிழ்வித்தனர். தமிழகத்திலிருந்து வருகையளித்த மௌலவி அப்துல் காதர் மஹ்லரி



கொடியேற்றத்தின் சிறப்புத் தன்மைகளை தமது உரையில் எடுத்துரைத்தார்.

அல் அப்ரார் பள்ளிவாசல் இமாம் மில்லத் இஸ்மாயில் ரியாஜி, “மகான் ஷாஹுல் ஹமீது நாயகரும் பன்முகச் சமுதாயமும்” எனும் தலைப்பில் சன்மார்க்க உரை நிகழ்த்தினார். இனம், மொழி, சமய பேதமில்லாமல் ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் நாகூர் ஆண்டகை அவர்கள் ஆற்றிய சமூக நற்பணி, சமூக நல்லிணக்கத்திற்கு மிகச் சிறந்த முன்னுதாரணம் எனக் குறிப்பிட்டு அவர் விளக்கினார்.

“நாகூர் நாயகர் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்கள். அதனால் அச்சுதப்ப நாயக்கர் போன்ற அன்றைய ஆட்சியாளர்கள் ஆண்டகை மீது அளவற்ற மரியாதை செலுத்தினர். அவர்கள் சென்ற இடமெல்லாம் மனித நேயப் பணி மேலோங்கியது. ஆன்மீக உதவிகளைச் செய்தார்கள். மனித சமூகம் எந்தவிதப் பாகுபாடும் இல்லாமல் வாழவேண்டும் என்று எடுத்துரைத்தார்கள். அவர்களுடைய கோட்பாடுகள் அரியவை” எனக் குறிப்பிட்டு, திருக்குர்ஆன் அத்தியாய வசனம் ஒன்றை இமாம் மில்லத் இஸ்மாயில் ரியாஜி மேற்கோள் காட்டினார்.

அந்த வசனம் வருமாறு:
“(நபியே) முற்றிலும் உண்மையைக்

கொண்டுள்ள இவ்வேதத்தை, நாமே உம்மீது அருளியிருக்கிறோம். ஆகவே, அல்லாஹ் உமக்கு அறிவித்தவைகளைக் கொண்டு மனிதர்களுக்கு இடையில் நீர் தீர்ப்பளிப்பீராக! நீர் சதிகாரர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பளிப்போராக இருக்க வேண்டாம்.”

நபிகள் நாயகம் அவர்களின் வம்சாவளியினரான ஷாஹுல் ஹமீது ஆண்டகை பெருமானாரின் நெறிமுறைகளை நிறைவாகப் பின்பற்றி ஆன்மீக, மனிதநேய மேம்பாட்டுக்குப் பாடுபட்டார்கள்.

நேசத்தை வளர்க்கும் இதுபோன்ற சமுகப் பிணைப்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும் இமாம் மில்லத் இஸ்மாயில் வேண்டுகோள் விடுத்தார்.

## வரலாறு

நாகூர் நாயகரின் வரலாற்றை நாம் அறிவோம். பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆண்டகை அவர்கள் 68 ஆண்டுகள் வாழ்ந்தார் கள். வட இந்தியாவின் மாணிக்கப்பூரில் பெற்றோருடன் வாழ்ந்த காலம் 18 ஆண்டுகள். குவாலியரில் சற்குரு சையிது முஹம்மது கவுது அவர்களுடன் 10 வருடம் தங்கியிருந்தார்கள். பல நாடுகளிலும் 12 வருடம் சஞ்சாரம் செய்தார்கள். நாகூரில் அவர்கள் நிலையாகத் தங்கி வாழ்ந்த காலம் 28 ஆண்டுகள்.

ஷாஹுல் ஹமீது ஆண்டகை சென்ற இடங்களில் நினைவுச் சின்னங்கள் உள்ளன. சிங்கப்பூர், பினாங்கு, ரங்கூன் தர்காக்கள் அவர்களின் இவ்வட்டார வருகையை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. அவர்களின் நினைவுச் சின்னமாக சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்கள் சமூகத்தினர் 1827-1830ஆம் ஆண்டுகளுக்கு இடையில் தெலுக் ஆயர் சாலையில் நாகூர் தர்காவைக் கட்டிய வரலாற்றை நாடு நன்கறியும். 1974 நவம்பர் 29ல் தேசிய நினைவுச் சின்னமாக தர்கா அறிவிக்கப்பட்டது. தர்காவைப் புதுப்பிக்கும் திட்டம் 25.11.1998 அன்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. தர்காவின் நிர்வாகப் பொறுப்புகளை நீதிமன்ற ஆணையின்படி 2000 அக்டோபர் பதினெட்டாம் நாள் முயிஸ் ஏற்றுக்கொண்டது.

தேசிய நினைவுச் சின்னங்களில் ஒன்றான நாகூர் தர்கா, இந்திய முஸ்லிம் மரபுடைமை நிலையமாக 20.5.2011ல் முன்னைய அதிபர் எஸ்.ஆர்.நாதன் அவர்களால் அதிகார பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. மறுவாரம் 27.5.2011 அன்று ஷாஹுல் ஹமீது நாயகரைச் சிறப்பிக்கும் மவ்லூது மரபுடைமை நிலையத்தின் மேல் தளத்தில் நடைபெற்றது. முயிஸ் தலைவர் ஹாஜி அலமி மூஸா, தர்கா நிர்வாகக் குழுவின் தலைவர் ஹாஜி எஸ்.எம். அப்துல் ஜலீல், துணைத் தலைவர் ஹாஜி ஷரஃப்தீன் முன்னிலையில் செயலாளர் ஹாஜி நசீர் கனி நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார்.

நாகூர் தர்கா மரபுடைமை நிலையம் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களின் ஒருங்கிணைப்பு மையமாகவும், நமது அடையாள அங்கமாகவும் விளங்கும் என்று தலைவர் எஸ்.எம். ஜலீல் குறிப்பிட்டார். இந்திய முஸ்லிம் அமைப்புகள் அவ்வப்போது இங்கு நிகழ்ச்சிகளை நடத்துவதற்குரிய வசதிகள் செய்து தரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

கந்தூரிக்கு வருகை தந்தவர்கள், மரபுடைமை நிலையத்தின் வழி தமிழ் முஸ்லிம்களின் வரலாற்றையும், சாதனைகளையும் அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பைப் பெற்றதாக மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தனர்.



# ஹஜ்ஜுப் பெருநாள் குர்பான் முறையில் சில மாற்றங்கள்

ஹஜ்ஜுப் பெருநாளின் போது அனுசரிக்கப்படும் குர்பான் சடங்கு தொடர்பான சில புதிய நடைமுறைகளை முயிஸ் அறிவித்திருக்கிறது. ஆண்டு தோறும் ஆஸ்திரேலியாவிலிருந்து அதிகமான ஆடுகள் இச்சடங்குக்காகத் தருவிக்கப் படுகின்றன. அதன் தொடர்பில் ஆஸ்திரேலியா வெளியிட்டுள்ள விதிமுறைகளை சிங்கப்பூர் முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டும் என்று முயிஸ் தெரிவித்திருக்கிறது.

ஆஸ்திரேலியா விலங்குகளின் பராமரிப்பைப் கருத்தில் கொண்டு கடந்த மார்ச் மாதம் புதிய விதிமுறைகளை வெளியிட்டது. அவற்றை சிங்கப்பூர் முஸ்லிம்கள் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப குர்பான் சடங்கை நிறைவேற்ற வேண்டும் என்று இஸ்லாமிய சமய மன்றம் தெரிவித்தது.

குர்பான் கொடுப்பதற்காகக் கொண்டு வரப்படும் ஆடுகளுக்கு முறையான பராமரிப்பு அளிக்க வேண்டும் என்பது ஒரு முக்கிய விதிமுறை. அதன்படி, குர்பான் கொடுப்பதற்கு முன் பள்ளிவாசல்களில் பராமரிக்கப்படும் ஒவ்வொரு ஆட்டுக்கும் இடையே 0.6 சதுர மீட்டர் இடைவெளி ஒதுக்கப்பட வேண்டும் என்பது மற்றொரு விதிமுறை.

குர்பான் ஆடுகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்வதைத் தடுக்க இது உதவும். புதிய விதிமுறைகளினால் குர்பான் ஆடுகளின் விலை அதிகரிக்கலாம் எனக் கருதப்படுகிறது. மேலும், குர்பான் சடங்கு முறை அனுபவம் உள்ளவர்களே ஆடுகளை அறுக்க அனுமதிக்கப் படுவார்கள். அதற்காக சுல்தான் பள்ளிவாசலில் உரிய பயிற்சி வழங்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் 38 பள்ளிவாசல்களைச் சேர்ந்த தொண்டூழியர்கள் கலந்து கொண்டு, புதிய விதிமுறைகளுக்கேற்ப ஆடுகளை அறுக்கும் வழிமுறையைக் கற்றுக் கொண்டனர். இதற்காக, ஆஸ்திரேலியாவிலிருந்து 100 ஆடுகள் தருவிக்கப் பட்டதாக முயிஸ் தெரிவித்தது.

# மலபார் முஸ்லிம் ஜமாத்தின் ரமலான் உணவுப் பங்கீட்டு உதவி

ரமலான் நோன்பு மாதத்தை முன்னிட்டு மலபார் முஸ்லிம் ஜமாத், வசதி குறைந்த குடும்பங்களுக்கு உணவுப் பங்கீட்டு உதவி வழங்கியது. அதற்கான “ரமலான் கிவ்” எனும் நிகழ்ச்சி விக்டோரியா ஸ்திரீட் மலபார் முஸ்லிம் பள்ளிவாசலில் நடைபெற்றது.

நோன்பு மாதத் தேவைக்காக 1200 வசதி குறைந்த குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டது. பிரதமர் அலுவலக அமைச்சரும், மூத்த வர்த்தக, தொழில் இரண்டாம் அமைச்சருமான எஸ். ஈஸ்வரன் இந்த நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து, மலபார் முஸ்லிம் ஜமாத்தின் நற்பணியைப் பாராட்டினார். பல இன, பல சமய ஒற்றுமை மூலம் ஒருங்கிணைந்த சமூகமாக சிங்கப்பூரை உருவாக்க எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளுக்கு இந்த நிகழ்ச்சி ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்று அவர் குறிப்பிட்டார்.

உதவிப் பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் மலபார் முஸ்லிம் ஜமாத், நன்றி தெரிவித்தது. இத்தகைய நற்பணி தொடரும் என்றும் ஜமாத் நிர்வாகிகள் கூறினர்.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



Launch of upgrading plans of Masjid Alkaff at Upper Serangoon, 4 May 2012




Launch of Touch of Ramadan celebrations, Mujahidin Mosque, 15 Jul 2012



Israk Mikraj lecture by Mufti Dr. Mohamed Fatris Bakaram, Al-Iman Mosque, 16 Jun 2012



aL.I.V.E Mentorship Conference, 2 Jun 2012




Customised Leadership for Madrasah Education Programme, 10 May 2012




46th Mosque Council, 12 May 2012



Aqiqah at Masjid Sultan, 28 Apr 2012, Internationally accredited auditor (in blue) briefing staff/volunteers



Nagore Dargah Indian Muslim Heritage Centre, Kanduri and Flag Raising event, 22 Apr 2012

# அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார மன்ற மீலாது விழா

அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார மன்றம் சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில் 29.4.2012 பிற்பகலில் மீலாது விழாவை நடத்தியது. அதன் இளையர் அணியும் இணைந்து கொண்டாடிய இவ்விழாவில் சுற்றுப்புற நீர்வள அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

முஸ்லிம் இளையர்களைச் சிறந்த சமூகத் தொண்டர்களாகவும், திறன்மிக்க வருங்காலத் தலைவர்களாகவும் உருவாக்கும் இலக்குடன் இளையர் அணியை அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார மன்றம் அமைத்துள்ளது.

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகம் நீண்ட காலமாக ஆற்றிவரும் அரும்பணிகளை அமைச்சர் தமது சிறப்புரையில் எடுத்துரைத்துப் பாராட்டினார். சிங்கப்பூரில் இந்திய முஸ்லிம்கள் ஒரு சிறிய சமூகமாக இருப்பினும், நாட்டின் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பங்காற்றி வந்துள்ளனர். பல காலமாக பரவலான சமூகப் பணிகளைச் செய்து வந்துள்ள இந்திய முஸ்லிம் முன்னோர்களின் வழியில் இளையர் அணி முன்னேற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கிவரும் அஃப்லாக் ஸ்டார்ஸ் மன்றம், இந்த மீலாத் விழாவில் 20 மாணவர்களுக்கு உதவியளித்ததை டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் வெகுவாகப் பாராட்டினார்.

"கல்வி உதவித் தொகை பெற்ற மாணவர்கள், தங்கள் குடும்பம் மற்றும் சமூகத்தின் எதிர்கால நம்பிக்கையாகத் திகழ்கின்றனர். அவர்கள் தங்கள் எதிர்கால முன்னேற்றம் மற்றும் சமூக முன்னேற்றத்தில் வெற்றி பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஏற்கெனவே நமது இந்திய சமூக முனனோர்கள் பற்பல சமூக நற்பணிகளை ஆற்றியுள்ளனர்.



அஃப்லாக் ஸ்டார்ஸ் இளையர் அணி அவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

பல காலமாக சிங்கப்பூர் நலனுக்காக இந்திய முஸ்லிம் முன்னோர்கள் ஆற்றி வந்துள்ள பணிகளின் அருமை பெருமைகளை மறந்து விடாமல் இளையர் அணி நம்பிக்கையுடன் செயல்பட்டு சிறப்படைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நல்வாழ்த்துகளை வழங்கினார் அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன்.

அஃப்லாக் ஸ்டார்ஸ் கல்வி, கலாசார மன்றம் 2009ல் தொடங்கப் பட்டதிலிருந்து மேற்கொண்டு வரும் பணிகளை அதன் தலைவர் ஷேக் அலாவுதீன் தமது வரவேற்புரையில் விளக்கினார். இஃப்தார்- நோன்பு திறப்பு, மீலாத் விழா, அன்னையர் தினக் கொண்டாட்டம், குழந்தை இல்ல வருகை, மதரஸா வகுப்புகள், பல பகுதிகளுக்கான கல்வி, கலாசார சுற்றுலா, சமுதாய நற்பணிகள் ஆகியவை அவற்றுள் அடங்கும். முயிஸ், பள்ளிவாசல்கள், சிண்டா, ஐஆர்சிசி, மற்றும் பல இன, சமய, சமூக அடித்தள அமைப்புகளுடன் மன்றம் இணைந்து செயல்பட்டு வருவதையும் அவர் குறிப்பிட்டார்.

அஃப்லாக் ஸ்டார்ஸ் அண்மையில் மலபார் பள்ளிவாசலுடன் இணைந்து வசதி குறைந்த குடும்பத்தினருக்கு மருத்துவப் பரிசோதனை வழங்கியதையும் ஷேக் அலாவுதீன் தெரிவித்தார்.

# தோப்புத்துறை முஸ்லிம் சங்கத்தின் ஆண்டு விழா

சிங்கப்பூர் தோப்புத்துறை முஸ்லிம் சங்கம் அதன் 63-64 ஆம் ஆண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தியது. சங்கத்தின் பொதுக் கூட்டமும், குடும்ப தினக் கொண்டாட்டமும் 1.4.2012 அன்று செந்தோசா சிலோசோ கடற்கரையில் நடைபெற்றன. அதில் சுமார் 350 அன்பர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.

சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், புதையலைத் தேடல், கயிறு இழுத்தல் போன்ற பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. காலை 9 மணிக்குத் தொடங்கிய இந்நிகழ்ச்சிகள் மதியம் 1 மணி வரை களைகட்டின. லுஹர் தொழுகைக்குப் பிறகு அனைவருக்கும் சுவையான மதிய உணவு பரிமாறப்பட்டது.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைவர் ஜனாப் பரியுல்லாஹ் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். தோப்புத்துறை முஸ்லிம் சங்கத்தின் மூன்று மூத்த உறுப்பினர்களுக்கு நீண்டகாலச் சேவை விருது வழங்கப்பட்டது. மருத்துவப் பட்டம் பெற்ற இருவருக்குச் சிறந்த எடுத்துக்காட்டு-முன்னுதாரண விருது அளிக்கப் பட்டது.

கல்வித் துறையில் சிறப்பாகச் செய்த மாணவர்களுக்குப் பொற்கிழியையும், போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளையும் சங்கம்



வழங்கியது. இவ்விழாவில் சங்கத்தின் தலைவர் ஹாஜி கே.எம். தீன் அவர்களுக்கு ‘சமுதாயச் செம்மல்’ விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்ட நிகழ்வில், சங்கச் செயலாளரின் அறிக்கையை அடுத்து, தலைவரின் சொற்பொழிவு இடம்பெற்றது. அதையடுத்து, தோப்புத்துறை முஸ்லிம் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கத்தின் இளையர் அணியும் அமைக்கப்பட்டது.

சங்கப் பொருளாளரின் நன்றியுரைக்குப் பிறகு, அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த அதிர்ஷ்டக் குலுக்கல் நடைபெற்றது. வண்ணமயமான பரிசுப் பொருட்கள் வினியோகிக்கப்பட்டன.

உஸ்தாத் அவர்களின் துஆவுடன் சிங்கப்பூர் தோப்புத்துறை முஸ்லிம் சங்கத்தின் ஆண்டு விழா மாலை 5.30 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

---

டாக்டர் ஹமீத் ரஹ்மத்துல்லாவின் தலைமையில் இளையர் அணி அமைக்கப் பட்டிருப்பது இந்த மீலாத் விழாவில் இரட்டிப்பு மகிழ்ச்சியை வழங்குவதாக அவர் மனநிறைவு தெரிவித்தார். இளையர் அணி எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் என்றும், பற்பல சாதனைகளை நிகழ்த்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அஃப்லாக் ஸ்டார்ஸ் மன்றத்தின் கல்வி, கலாசார பணிகளுக்கு நன்கொடை வழங்கி வரும் அமைப்புகளுக்கும், ஆதரவாளர்களுக்கும் தலைவர் ஷேக் அலாவுதீன் நன்றி பாராட்டினார்.

சமூகத்திற்குப் பயனளிக்கும் பற்பல நிகழ்ச்சிகளையும், செயல் திட்டங்களையும் மன்றம் தொய்வில்லாமல் தொடர்ந்து மேற்கொள்ளும் என்று அவர் உறுதி தெரிவித்தார்.

# ‘சுவாசம்’ கவிதை இசைவட்டு வெளியீடு

சிங்கப்பூர் கடைய நல்லூர் முஸ்லிம் லீக் சார்பில் ‘சுவாசம்’ எனும் கவிதை இசைவட்டு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் மொழி விழாவின் ஓர் அங்கமாக கடந்த ஏப்ரல் 7 மாலை தேசிய நூலக வாரிய அரங்கில் வெளியீட்டு விழா நடைபெற்றது.

கவிஞர் க.து.மு. இக்பால், முகம்மது அலி, இளவழகன், முருகன் முதலானோர் இயற்றிய கவிதைகள் இந்த இசைவட்டில் இடம்பெற்றுள்ளன. இக்கவிதைகளை முன்னாள் அதிபர் எஸ்.ஆர்.நாதன், பிரதமர் அலுவலக அமைச்சர் எஸ். ஈஸ்வரன், முன்னைய நியமன நாடாளுமன்ற உறுப்பினர் திரு விஸ்வா சதாசிவன், வசந்தம் தொலைக்காட்சியின் மூத்த துணைத் தலைவர் டாக்டர் சித்ரா ராஜாராம் முதலானோர் வாசித்துள்ளனர்.

உள்ளூர் இசைக் கலைஞர் ஷபீர் இவற்றுக்கு இசையமைத்துள்ளார். ‘சிங்கை நாடு’ என்ற தமது சொந்தக் கவிதைக்கும் அவர் இசையமைத்துப் பாடியுள்ளார். சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கமும், தமிழர் பேரவையும் இதற்கு முக்கிய ஆதரவு வழங்கின. குறிப்பாக, ‘சிங்கை நாடு’ என்ற இப்பாடல், இந்த ஆண்டு தேசிய தினப் பாடலாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது பெருமைக்குரிய நல்ல செய்தியாகும்.

வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நியமன நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர். தினகரன், “உயிர் மூச்சின் அர்த்தத்தைப் பறைசாற்றும் இந்த சுவாசம் எனும் முயற்சி, தமிழ் மொழி மேலும் வளப்பம் அடைவதற்கு ஒரு முக்கிய படியாகும்” என்று பாராட்டினார்.

தமிழ் மொழி விழா 2012க்கு ஒரு பங்களிப்பாக அமைந்துள்ள இந்தப் புதிய படைப்பு நமது இளையர்களுக்குத் தமிழ்க் கவிதையின் இனிய நற்சுவையை அள்ளி வழங்கி, அதன் மூலம் தமிழ் மொழியின் மீதுள்ள ஆர்வத்தையும் வளர்க்கும் என்று மொழி ஆர்வலர்கள் கருத்துரைத்தனர். தமிழ்க் கவிதைச்



சுவையின் இனிமையை அதிகமாக்கி கேட்போர் உள்ளங்களில் அதை இன்புறப் பதிய வைக்கும் முயற்சியை வெற்றிகரமாக இந்த இசை வட்டின் மூலம் கடையநல்லூர் முஸ்லிம் லீக் செய்துள்ளது என்றும் அவர்கள் பாராட்டினர்.

“மூன்று வயது சிறுவர்கள் முதல் முன்னாள் அதிபர் திரு எஸ்.ஆர்.நாதன் வரை பலதரப்பட்ட வயதினர் பங்கேற்று கவிதைகளை உணர்வுபூர்வமாக வாசித்துள்ளார்கள். இது சிறப்புக்குரியது” என்று மனநிறைவு தெரிவித்தார் ‘சுவாசம்’ தயாரிப்பாளரான ஹை பிரீட் மீடியா புரொடக்‌ஷனின் உரிமையாளரும், கடையநல்லூர் முஸ்லிம் லீகின் பொருளாளருமான ராஜா முகம்மது. மொத்தம் 25 கவிதைகள் இந்த இசை வட்டில் இடம் பெற்றுள்ளன.

தமிழ் மொழியை இளம் தலைமுறை யினருக்கு எடுத்துச் செல்லும் ஒரு முயற்சியே இந்த இசைவட்டு என்றும் ராஜா முகம்மது குறிப்பிட்டார்.

கவிதை வாசிப்புக்கு முதல்முறையாக பின்னணி இசையமைத்துள்ள ஷபீர், இது தமக்கு சவால் மிக்க அனுபவமாக அமைந்ததாகக் கூறினார்.

இந்த இசைவட்டிலுள்ள கவிதைகள் புத்தகமாகப் பதிப்பிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது. வேறு சில கவிஞர்களின் கவிதைகளும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன.

# பணத் தாள்

## - க.து.மு. இக்பால் -



தமிழ் மொழி விழா 2012ன் ஒரு பகுதியாக சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம் ‘காகித ஆயுதங்கள்’ எனும் பொதுத் தலைப்பில் 8.4.2012 அன்று மாலை கவியரங்கம் நடத்தியது. பணத் தாள், விடைத் தாள், செய்தித் தாள், வாக்குத் தாள், கடிதத் தாள், திருமண அழைப்புத் தாள் ஆகிய தலைப்புகளில் கவிதைகள் படைக்கப்பட்டன. அதில் இடம் பெற்ற ஆசியான் கவிஞர் க.து.மு. இக்பாலின் கவிதை இது.

எல்லாத் தாள்களையும்
இல்லாத தாள்களாய் ஆக்கிவிடும்
பணத்தாள் தந்து
என்னைப் பாட அழைத்த
கனத்த தாள், கவித்தாள்,
கவியரங்கின் தலைமைத்தாள்
வாணியம்பாடியின் வண்ணம்பாடி
அப்துல் காதர் அவர்களுக்கு நன்றி

*2*
வாளைவிட
அதிகம் வலிமை கொண்டது
எழுதுகோல் என்பார்கள்....
அந்த எழுதுகோல் தலைவணக்கம் செய்வது
காகிதத்தில்..
எல்லாக் காகிதங்களும்
தலைவணங்குவது
பணத்தாளிடம்

*3*
பணத்தாளால் எல்லாத் தாள்களையும்
வாங்க முடியும்

*4*
பணத்தாளின் இருப்பில்தான்
நம் எல்லோருடைய இருப்பும் இருக்கிறது

*5*
செய்தித்தாள் வாசிப்பவர்களைவிடப்
பணத்தாள் வாசிப்பவர்கள் அதிகம்

*6*
வினாத்தாள் நமக்கு விளங்குகிறதோ இல்லையோ
பணத்தாள் எல்லோர்க்கும் விளங்கும்

*7*
விடைத்தாள் பள்ளிக்கூடக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்
பணத்தாள் வாழ்க்கையின் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்

*8*
வாக்குத்தாள் இல்லாமல்
ஆட்சி நடத்தும் நாடுகள் இருக்கின்றன
பணத்தாள் இல்லாமல்
ஆட்சி நடத்தும் நாடு இருப்பதாகத் தெரியவில்லை

*9*
திருமணத்தாள் வாழ்க்கை ஒப்பந்தம் பற்றிச் சொல்லும்
பணத்தாள் வாழ்க்கையே தானென்று சொல்லும்...

*10*
திருமணத்தாள் இல்லாமலும் கல்யாணம் நடக்கும்;
ஆனால்
பணத்தாள் இல்லாமல் வாழ்க்கை நடக்காது

*11*
எல்லாப் புன்னகையிலும் எனக்கு மிகவும் பிடித்தது
வெள்ளிப் புன்னகை

*12*
“பொருளென்னும் பொய்யா விளக்கம் இருள் அறுக்கும்...”
என்று கூறும் வள்ளுவர்
“பொருள் செய்க...” என்றும் நமக்கு போதனை செய்கிறார்

*13*
கசங்கினாலும் கவர்ச்சி குறையாத பணத்தாள்
கைகளில் இருக்கும்வரையில் நம் உள்ளங்கள்
மட்டும் அல்ல உடைகளும் கசங்குவதில்லை

*14*
பணத்தாள் என்
கண்ணீர் துடைக்கும் கைக்குட்டை மட்டுமல்ல
மானத்தைக் காக்கும்
ஆடையாகவும் இருக்கிறது

---

*“விசுவாசிகளே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பிரகாரமே உங்கள் மீதும் நோன்பு நோற்பது விதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் நீங்கள் பரிசுத்தவான்களாகலாம்.” (2:183)*

# சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி பேராசிரியருடன் தகவல் தொழில்நுட்பக் கலந்துரையாடல்

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 05-05-2012 அன்று, மாலை 5 மணி முதல் 7 மணி வரை, "தகவல் தொழில்நுட்பக் கலந்துரையாடல்" நிகழ்ச்சி ஒன்றை, ஜாலான் சுல்தான் சாலையில் அமைந்துள்ள சுல்தான் பிளாசாவில் சிறப்பாக நடத்தியது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் 24 ஆண்டுகள் அனுபவம் பெற்றவரும், திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் பேராசிரியருமான முனைவர் T அப்துல் ரஜாக், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அதிநவீன விஞ்ஞான வளர்ச்சி கண்டுவரும் கணினியுகத்தில், சிங்கப்பூரில் மட்டுமின்றி உலக அரங்கில் தகவல் தொழில்நுட்பத் துறையில் உருவாகி வரும் மாறுதல்கள், வாய்ப்புகள் மற்றும் சவால்களைப் பற்றியும், அவைகளை போட்டித்திறன்மிக்க யுக்திகள் கொண்டு எவ்வாறு எதிர்கொள்ளலாம்? என்பது பற்றியும் இக்கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டன.

சங்கத்தின் துணைச் செயலாளர் இத்ரிஸ் மாலிம் வரவேற்புரை வழங்க, சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார் சங்கத்தின் துணைத் தலைவர் முஹம்மது ஜின்னா. அமானுல்லாஹ் பொன்னாடை போர்த்த, சிறப்பு விருந்தினரின் 24 ஆண்டு கால உயர்கல்விச் சேவையைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கினார் சங்கத்தின் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர். முஹம்மது ஹனீபா தாஜுத்தீன் வாழ்த்துரை வழங்க, நிறைவாக நன்றி கூறினார் அப்துல் மாலிக். நிகழ்ச்சியை நெகிழ்ச்சியோடு வழிநடத்தினார் நிக்சன் செல்வராஜ்.

இச்சங்கத்தின் உறுப்பினர்களும் தகவல் தொழில்நுட்பத் துறை வல்லுநர்களும் கலந்துகொண்ட இக்கலந்துரையாடல், பயனுள்ள பல தகவல்களை பகிர்ந்து கொண்ட அரிய நிகழ்வாக அமைந்திருந்தது.



## தொழில் முனைப்பு கருத்தரங்கு

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 22-04-2012 அன்று, காலை மணி 10 முதல் பிற்பகல் 1 மணி வரை, "சிங்கப்பூரில் சொந்தத் தொழில் துவங்குவது எப்படி?" என்ற தலைப்பில் பொதுமக்களுக்கான இலவச தொழில் முனைப்பு கருத்தரங்கு ஒன்றை, பீட்டி சாலையில் அமைந்துள்ள சிண்டா தலைமையக அரங்கத்தில் நடத்தியது.

சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழிற்சபையின் தலைவரும், வர்த்தக ஆலோசகரும் கணக்காய்வாளருமான திரு R நாராயணமோகன், இக்கருத்தரங்கை சிறப்பாக நடத்தினார். லிட்டில் இந்திய வர்த்தகர் மற்றும் மரபுடைமைச் சங்கத்தின் தலைவர், தொழிலதிபர் திரு ராஜகுமார் சந்திரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தன் தொழில் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். இக்கருத்தரங்கை நிக்சன் செல்வராஜ் துவங்கி வைத்தார். அப்துல் நஜிர் அறிவிப்புகள் செய்ய, நினைவுப்பரிசுகளை வழங்கினார் சங்கத்தின் பொருளாளர் ஹிதாயதுல்லா. சங்கத்தின் உறுப்பினர்களும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்ட இக்கருத்தரங்கு, தொழில் முனைப்பு பற்றிய விழிப்புணர்வையும், பயனுள்ள தகவல்களையும் வழங்கியது. சங்கத்தின் துணைப் பொருளாளர் கலந்தர் மொஹிதீன் நன்றி கூறினார்.